MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only



Printed Matter




## மார் தோமாவின் நினைவு நாள்

ஜூலை 3

To

BOOK POST

If Undeliveried please return to ...
Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165
Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852


# Bulletin

## Diocese of Marthandam

## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

"Realization of God is nobler than serving God."

- Venerable Archbishop Mar Ivanios



ஜூலை 15

## வணக்கத்திற்குரிய பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவுத் திருநாள்

மலர் 21 ஜூலை 2024 இதழ் 7

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.07.2024 | Monday | 6.30 am<br>6.15 pm | Holy Mass<br>Holy Mass | DM Convent, Mtm<br>Attoor |
| 02.07.2024 | Tuesday | 4.00 pm | Chapel Blessing | Kanchiyode |
| 03.07.2024 | Wednesday | 9.00 am<br>5.30 pm | First Profession<br>Holy Mass | Mukkadal Ashram<br>Ambilikonam |
| 07.07.2024-<br>09.07.2024 | Sunday -<br>Tuesday | | TNBC | Velankanni |
| 10.07.2024 | Wednesday | 9.45 am<br>6.00 pm | Marriage<br>Holy Mass | Palavilai<br>Cathedral, Pattom |
| 11.07.2024 | Thursday | 10.30 am<br>3.00 pm | Marriage<br>Ordination | Cathedral, Pattom<br>Mukadal Ashram |
| 15.07.2024 | Monday | - | Mar Ivanios Day | |
| 16.07.2024-<br>19.07.2024 | Tuesday -<br>Friday | | Annual Retreat for the Priests | Palai |
| 20.07.2024 | | 10.00 am | Jubilee Celebration | HOM |
| 22.07.2024-<br>26.07.2024 | Monday -<br>Friday | | Annual Retreat for the Priests | Palai |
| 27.07.2024 | Saturday | | First Holy Communion | Pushpagiri |
| 30.07.2024 | Tuesday | 6.30 am<br><br>10.00 am<br>3.00 pm | Holy Communion<br><br>School Board Meeting<br>MPDNLtd. Board Meeting | DM Convent Marthandam<br>Bishop's House<br>Bishop's House |




# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 21 ஜூலை 2024 இதழ். 7


**Patron**
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

**Editor**
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

**Cover Design**
*Mrs. Uni Kumari B.*

**Printing**
*Santhom Press,*
*Marthandam*

**Published By**
*The Chancellor*
*Diocese of Marthandam*





மலர். 21 ஜூன் 2024 இதழ். 6

Address :
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist.- 629 165
E-mail : mardiobulletin@gmail.com



# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the Diocese of Marthandam



மலர் 21 ஜூலை 2024 இதழ் 7

**முக்கியமான நாட்கள்**

**ஜூலை 2024**

- **01** தேசிய மருத்துவர் தினம்
- **07** உலகளாவிய மன்னிப்பு தினம்
- **11** உலக மக்கள் தொகை தினம்
- **12** தேசிய எளிமை தினம்
- **17** சர்வதேச நீதி தினம்
- **24** உறவினர்கள் தினம்
- **28** பெற்றோர் தினம்
- **29** உலக புலிகள் தினம்
- **30** சர்வதேச நட்பு தினம்

## உள்ளடக்கம்


1. Circulars 3-17
2. பாசமிகு ஆயரின் பெயர் கொண்ட விழா மற்றும் மறைமாவட்ட தின கொண்டாட்டம் 18
3. புனித ஜான் மரிய வியானி குருக்கள் இல்லம் அர்ச்சிப்பு 18
4. குருமடச் செய்திகள் 19
5. குருக்களின் தியானம் 21
6. மறைபரப்பு தளச்செய்திகள் 21
7. தீன சேவன துறவற சபை (DSS) 22
8. Transfers and Appointments of Priests 2024 Marthandam Diocese 23
9. New Offices of Priests 2024 Marthandam Diocese 24
10. Change of Addresses 25
11. நற்செய்தி சங்கம் 27
12. புனித வின்சென்ட் தே பவுல் சபை 27
13. MCA 27
14. MIDS 28
15. MCYM 30
16. பேராலயக் கட்டுமான பணிக்கான நன்கொடைகள் (ஜூன் 2024) 30
17. Health for One Million (HOM) 31
18. திருமண ஆயத்தப்பயிற்சி 32
19. மார் கிறிஸோஸ்டோம் கல்வி யியல் கல்லூரி கிராத்தூர் 33
20. பெயர் விழா நல்வாழ்த்துக்கள் 34
21. HOM - Special School for the Mentally Retarded 35
22. மறைவட்ட செய்திகள் 36
23. நன்றி நவில 37
24. ஆயரின் ஜூன் மாத நிகழ்வுகள் 38
25. இம்மாதம் நினைவு கூர 39
26. Bishop's Diary 40



*Printed by*

**Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852**




# THE SYRO-MALANKARA CATHOLIC CHURCH


MORAN MOR BASELIOS CARDINAL CLEEMIS
MajorArchbishop-Catholicos

Major Archiepiscopal Curia
Catholicate Centre
Pattom, Trivandrum - 695 004


Prot. No. CCL 2/2024 20.05.2024

## Circular

***மேதகு ஆயர்களே, வணக்கத்திற்குரிய கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, றம்பான்மார்களே, மதிப்பிற்குரிய குருக்களே, திருத்தொண்டர்களே, இருபால் துறவிகளே, ஆண்டவரில் அன்பிற்குரிய விசுவாசிகளே!***

**1. மறுவொன்றிப்பின் நூற்றாண்டு (2030 செப்டம்பர் 20)**

மலங்கரை கத்தோலிக்க திருச்சபையாக வளர்ச்சி கண்ட மறுவொன்றிப்பு இயக்கம் அதன் நூற்றாண்டு விழாவை காண தன்னையே தயாரித்துக் கொள்கிறது. இவ்விழா 2030 செப்டம்பர் 20-ம் நாள் நடைபெறவுள்ளது. "நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன்" (யோவா 17:22). ஆண்டவர் இயேசு மரணத்திற்கு முன் ஏறெடுத்த இந்த மன்றாட்டு தனது உடலாகிய திருச்சபையின் ஒன்றிப்பை குறிப்பிட்டு காட்டுகிறது. திருச்சபையே அவரது உடல் (எபே 1:23). கிறிஸ்து தலையாய் இருக்கிறார். எல்லா நம்பிக்கையாளர்களும் அவரது உடலின் உறுப்புகளாக உள்ளனர் (1கொரி 6:15). தலையும் உடலும் பிரிக்க முடியாது இணைந்துள்ளது. எனவே தலையும் உடலும் இணைந்திருப்பது போல நம்பிக்கை சமூகம் முழுவதும் இயேசுவுடன் ஒன்றித்திருக்க வேண்டும். வரலாற்று சூழல் மற்றும் இறையியல் காரணங்களால் இந்த ஒன்றிப்பிற்கு சிதைவு ஏற்பட்டுள்ளது. கிறிஸ்துவின் மறையுடலாகிய திருச்சபையிலிருந்து பல்வேறு கட்டங்களில் பல பகுதிகளும் வெட்டி அகற்றப்பட்டன.

1653-ல் நடந்த சாய்ந்த சிலுவை சபதத்திற்கு பின் புதிய அணி, பழைய அணி என திருத்தூதர் தோமாவின் திருச்சபை பிளவுப்பட்டுபோனது. இது மிகப்பெரிய காயமாகவே இருந்து வந்தது. இக்காயத்திற்கு கட்டுப்போட்டு திருச்சபைகளுக்கிடையே ஒன்றிப்பை உருவாக்க 20-ம் நூற்றாண்டில் கடவுள் தேர்ந்து கொண்டவரே வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகை . அவர் பெதனி துறவற சமூகங்களை தோற்றுவித்தார். புடமிடப்பட்ட ஒரு ஆன்மீக வாழ்க்கை பாணியை வடிவமைத்தார். துறத்தல் மனநிலைக்கு மாதிரியானார். இவ்வாறு மலங்கரை கத்தோலிக்க திருச்சபையில் 1930 செப்டம்பர் 20-ம் நாள் ஒன்றிப்பை நிலைநாட்டினார். மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை மக்களாகிய நமக்கு மறுவொன்றிப்பின் நூற்றாண்டு விழாவுக்காக ஆயத்தம் செய்ய 7 ஆண்டுகள் உள்ளன.

## 2. மறுவொன்றிப்பின் நூற்றாண்டு விழா தயாரிப்பு செயல் திட்டங்கள் (2024 செப்டம்பர் 20 - 2030 செப்டம்பர் 20)

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை மறுவொன்றிப்பின் நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதற்கான தயாரிப்புகளுக்கு தொடக்கமிட்டுள்ளது. இத்திருச்சபையோ அதன் அடிப்படை பணிகளுடன் இணைந்து செல்கின்ற செயல்திட்டங்களை உருவாக்க விரும்புகிறது. நூற்றாண்டு விழா மறுவொன்றிப்படைந்த திருச்சபையை இன்னும் அதிகம் வலுப்படுத்த வேண்டும். திருச்சபையின் ஒன்றிப்பை உறுதிபடுத்த வேண்டும். திருச்சபை மக்கள் ஒவ்வொருவருடைய வாழ்விலும் மாற்றங்கள் மலர்ந்து அவர்களது கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டும். சுருங்ககூறின், திருச்சபையின் ஒட்டுமொத்த வளர்ச்சியை முன்கண்டு இத்திருச்சபை நூற்றாண்டு விழாவை திட்டமிட வேண்டும். நூற்றாண்டு விழா காணும் இத்திருச்சபை இரண்டு இலட்சியங்களை கொண்டு முன்னேறுகிறது. a) தன்னையே புதுப்பித்து



கொள்ளுதல். b) பொது சமூகத்தில் சான்று பகிர்கின்ற திருச்சபையாக உருவாக்கம் பெறுதல். நற்செய்தியை முழக்கமிட்டு அறிவிக்கவும், கொண்டாடவும், வாழவும் நமது குடும்பங்களை புதுப்பித்துக் கொள்ளவும், இறையழைத்தலுக்கு முக்கியத்துவம் வழங்கவும் திருச்சபையின் நற்செய்தி அறிவிப்பு திருப்பணிக்கு வலுவுட்டவும் சிறுவர்களையும் இளையோர்களையும் திருச்சபையை நேசிப்பவர்களாக வளரச் செய்யவும் அதிக ஆர்வமுடன் சகோதரி சபைகளுடனும் பொது சமூகத்துடனும் உரையாடல் மேற்கொள்ளவும் தன்னை தயாரித்து கொள்ளும் நோக்கத்தில் மறுவொன்றிப்பு நூற்றாண்டு கொண்டாட்டங்களுக்கு வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. “உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்” (மத் 16:15) என்பதே. ஆண்டவர் இயேசு அளித்த இறுதி கட்டளை. திருச்சபையின் திருப்பணிகள் அனைத்தும் இக்கட்டளையின் அடிப்படையில் புரிந்துகொள்ளப்பட வேண்டும். நற்செய்தி அறிவிப்பதற்காகவே திருச்சபை நிலை கொள்கிறது. நற்செய்தி அறிவித்தல் பணிக்கு மூன்று அம்ச கூறுகள் உள்ளன. a) நற்செய்தியை கற்பித்தல். b) நற்செய்தியை கொண்டாடுதல். c) நற்செய்தியை வாழ்வாக்குதல். திருச்சபை நற்செய்தியை கற்றுக்கொள்வது என்றால் இறைவார்த்தை கற்றலாகும், நற்செய்தி கொண்டாட்டம் என்றால் அருளடையாளம் மற்றும் வழிபாட்டு முறையை கற்று கொள்வதாகும், நற்செய்தியை வாழ்வாக்குவது என்பது இரக்க செயல்களினால் சான்று பகிரும் திருப்பணிகளை குறிக்கிறது. இந்த முப்பெரும் பணிகள் மெசியாவின் இறைவாக்கு, குருத்துவ, அரச பணிகளுடன் தொடர்பு கொண்டிருக்கிறது. இந்த எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டு மறுவொன்றிப்பின் நூற்றாண்டு விழாவிற்கான தயாரிப்பு நிகழ்வுகளை திருச்சபை திட்டமிட்டு தருகிறது.

**i) இறைவார்த்தை ஆண்டு (Year of the Word of God)** 2024 செப்டம்பர் 20 முதல் 2025 செப்டம்பர் 19 வரை- இந்த ஆண்டில் இறைவார்த்தை கற்றல், தியான வாசிப்பு செய்தல் (Lectio Divina) போன்றவை முக்கியத்துவம் பெறுகின்றன.

**ii) அருளடையாளங்களின் ஆண்டு (Year of Sacraments)** 2025 செப்டம்பர் 20 – 2026 செப்டம்பர் 19 வரை - அருளடையாளங்கள், திருவழிபாட்டுமுறை, நம்பிக்கை போன்றவற்றை கற்றறிவது முக்கியத்துவம் பெறுகிறது.

**iii) இரக்கத்தின் ஆண்டு (Year of Charity)** 2026 செப்டம்பர் 20 – 2027 செப்டம்பர் 19 வரை - இயேசுவின் கருணையின் தொடுதல் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் முக்கியத்துவம் பெறுகிறது.

**iv) குடும்ப ஆண்டு (Year of Family)** 2027 செப்டம்பர் 20 2028 செப்டம்பர் 19 வரை - குடும்ப உறவு, குடும்பத்தில் அருள்வாழ்வு, குடும்பங்கள் சந்திக்கும் சவால்கள் போன்றவை முக்கியத்துவம் பெறுகின்றன.

**v) நற்செய்தி அறிவிக்கும் பணிக்கான இறையழைத்தல் ஆண்டு (Year of Mission)** 2028 செப்டம்பர் 20 – 2029 செப்டம்பர் 19 வரை- குருத்துவ துறவற இறையழைத்தல்களை ஊக்குவித்தலும், நற்செய்தி அறிவிக்கும் திருப்பணியும் முக்கியத்துவம் பெறுகின்றன.

**vi) சிறுவர் - இளையோர் அர்ப்பண ஆண்டு (Commitment of Year of Children and Youth)** செப்டம்பர் 20 2028 – 2029 செப்டம்பர் 19 வரை- சிறுவர்கள் மற்றும் இளையோர்கள் திருச்சபையின் குரலுக்கு செவிமடுப்பவர்களாக மாறவும் இளையோர்களை திருச்சபையின் திருப்பணிகளில் பங்கேற்க வைப்பதற்கும் உகுந்த செயல் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

**vii) நூற்றாண்டு விழா (Year of Century) நன்றியறிதல் ஆண்டு** 2029 செப்டம்பர் 20 – செப்டம்பர் 20, 2030 வரை - இந்த ஆண்டில்



மறுவொன்றிப்பு முயற்சிகளுக்கு தலைமைகொடுத்த நல்லுள்ளங்களை குறித்து கற்று அறியவும் உறுதிபாடுகள் வழங்கவும் முயற்சிக்க வேண்டும்.

2024 செப்டம்பர் 20 முதல் 2025 செப்டம்பர் 29 வரையிலான இறைவார்த்தை ஆண்டு நிகழ்வுகளின் பொறுப்பு ஆயர்மாமன்ற விவிலிய பணிக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக ஆபிரகாம் மார் ஜூலியோஸ் ஆண்டகையும், துணை தலைவர்களாக வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையும், தோமஸ் மார் எவ்சேபியோஸ் ஆண்டகையும் நியமிக்கப்பட்டுள்ளனர். 7 ஆண்டுகள் தொடரும் மறுவொன்றிப்பின் நூற்றாண்டு விழா செயல் திட்டங்களின் ஒருங்கிணைப்பாளாராக கூரிய ஆயர் மேதகு ஆன்றணி மார் சில்வானோஸ் ஆண்டகை நியமிக்கப்பட்டுள்ளார். நூற்றாண்டு விழா செயல்திட்டங்களை முன்னின்று நடத்த குருக்களில் ஒருவர் காதோலிகேட் மையத்தில் தங்கி செயல்படுவார். 2024 செப் 21-ம் நாள் பாறசாலை மறைமாவட்டத்தில் நடத்தப்படும் 94-ம் மறுவொன்றிப்பு ஆண்டுவிழா நாளில் இறைவார்த்தை ஆண்டின் துவக்கவிழா நடத்தப்படும்.

## 3. மறுவொன்றிப்பு ஆண்டுவிழா கொண்டாடும் இடங்கள்

மறுவொன்றிப்பு ஆண்டுவிழா கொண்டாட்டங்களை அடுத்து வரும் ஆண்டுகளில் கீழ்குறிப்பிடும் மறைமாவட்டங்கள் பெறுப்பேற்று நடத்தும்.

2024 - பாறசாலை மறைமாவட்டம்
2025 - பத்தனம்திட்டை மறைமாவட்டம்
2026 - புனித எப்ரேம் கட்கி-புனே மறைமாவட்டம்
2027 - பெத்தேரி மறைமாவட்டம்
2028 - மாவேலிக்கரை மறைமாவட்டம்
2029 - திருவல்லா உயர்மறைமாவட்டம் - நூற்றாண்டு தொடக்கம்
2030 - திருவனந்தபுரம் அதிஉயர்மறைமாவட்டம் - நூற்றாண்டு விழா நிறைவு.

**4. மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புபணி அறிவுரைக்குழு**

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபையின் 28-வது ஆயர் மாமன்ற கூடுகை "மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புபணி அறிவுரைக் குழுவை" உருவாக்க முடிவெடுத்தது. இந்த மேய்ப்புபணி அறிவுரைக்குழு நம்முடைய திருச்சபையில் முதன் முறையாக உருவாக்கம் செய்யப்படுகிறது. மறைமாவட்ட மேய்ப்புபணி அறிவுரை குழுக்கள் போல் இக்குழுவில் ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் என பிரதிநிதித்துவ அடிப்படையில் உறுப்பினர்களாக இருப்பர். இதன் முதற் கூடுகை செப்டம்பர் 20-ம் நாள் காதோலிகேட் மையத்தில் வைத்து நடைபெறும். இதனை குறித்த கூடுதல் தகவல்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

**5. 94-ம் மறுவொன்றிப்பு ஆண்டுவிழா - பாறசாலை மறைமாவட்டத்தில்**

2024 செப்டம்பர் 20, 21 தேதிகளில் பாறசாலை மறைமாவட்டத்தில் வெங்ஙானூர் VPS மலங்கரை கத்தோலிக்க மேல்நிலை பள்ளி வளாகத்தில் 94-ம் மறுவொன்றி ஆண்டுவிழா நடைபெறும். செப்டம்பர் 20-ம் நாள் மாலையில் நற்செய்தி கூட்டமும், செப்டம்பர் 21-ம் நாள் காலையில் 8 மணி முதல் 10 மணி வரை MCCL, MCYM, MCA ஆகிய இயக்கங்களின் கூடுகைகளும், 10.30 மணி முதல் திருப்பலியும் பொதுகூட்டமும் நடைபெறும். மதியம் 1.30 மணிக்கு அன்பின்விருந்துடன் ஆண்டுவிழா கொண்டாட்டம் நிறைவு பெறும்.

**6. மலங்கரை சுறியானி கத்தோலிக்க இளையோர் மறைக்கல்வி நூல்**

நமது திருச்சபையில் இளையோர்களுக்கான மறைக்கல்வி நூல் 2025 மே மாதம் வெளியிடப்படும். இளையோர் மறைக்கல்வி வகுப்புகள்



2025 ஜூன் மாதத்திலிருந்து இந்நூலை மையமாக கொண்டு ஆரம்பமாகும்.

அருட்தந்தை முனைவர் ஜார்ஜ் தோமஸ் கொச்சுவிளையில் அவர்கள் மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபையின் திருமண நீதிமன்றத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். நமது திருச்சபையில் இளம் குருமட பயிற்சியின் 4-ம் ஆண்டு 2024-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் பாறசாலை மறைமாவட்டத்தில் காட்டாக்கடை அருகே உள்ள பெத்தலகேம் இல்லத்தில் வைத்து நடத்தப்படுகிறது. அருட்தந்தை றோயி அவர்கள் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மறுவொன்றிப்பு நூற்றாண்டுக்கான தயாரிப்புகள் ஆன்மீக சான்று பகிர்தலுக்கும் திருச்சபை மக்களின் ஜெப வாழ்விற்கும் வழி வகுக்கட்டும். அனைவரும் அனைத்து காரியங்களிலும் ஒத்துழைக்க வேண்டுமென்று நினைவூட்டுகிறேன். நற்செய்தி சங்க உறுப்பினர்கள் வாரத்தில் இரண்டு நாட்கள் இக்கருத்துகளுக்காக நோன்பிருந்து ஜெபிக்க வேண்டும். கடவுளின் அருளும் இரக்கமும் உங்களில் நிறைவாக பொழியப்படுவதாக.

கடவுளின் கருணையும், ஆசீரும் உங்கள் மேல் என்றென்றும் இறங்கி தங்குவதாக.

இவண்,
இறைவனில் உங்கள் எளிய ஊழியன்,

+Baselios Cleemis

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
உயர் பேராயர் மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் காதோலிக்கோஸ்

இறைஅருளாலும்
திருஆட்சிப்பீடத்தின் இசைவாலும்
மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின்
**மேஜர் ஆர்ச்சுபிஷப் - காதோலிக்கோஸ்**
மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்
பாவாவிடமிருந்து
நமது நிர்வாகத்திற்கு உட்பட்ட
ஆயர்கள், கோர் எப்பிஸ்கோப்பாமார்கள்,
ரம்பான்மார்கள், குருக்கள், திருத்தொண்டர்கள்,
துறவிகள் மற்றும் இறைமக்கள் ஆகிய
அனைவருக்கும் ஆசிகள்.

Prot. No. CPL 2/2024 20.06.2024

தாமாய்த் தோன்றியவரும் ஆதிமுடிவற்றவரும், உள்ளியல்பில் சரிநிகர் ஆனவருமாய் இருக்கிற மூவோர் இறைவனுக்குப் புகழ்

**வணக்கத்திற்குரிய பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் 72-வது நினைவுத் திருநாள் மற்றும் திருப்பயணம் - 2024**

*மேதகு ஆயர்களே, மதிப்புக்குரிய கோர்எப்பிஸ்கோப்பாமார்களே, ரம்பான்மார்களே, அருட்தந்தையர்களே, திருத்தொண்டர்களே, துறவறத்தார்களே, ஆண்டவருக்குள் அன்பான இறைமக்களே,*

நம் ஆண்டவரின் திருத்தூதர்களுள் ஒருவரான திருத்தூதர் மார் தோமாவின் நற்செய்தி முழக்கத்தால் உருவான திருச்சபை மக்கள்; மார் தோமா கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்டனர். இன்று பல்வேறு சபைகளாக பிளவுப்பட்டு நிற்கும் இத்திருச்சபைகள் திருத்தூதர் தோமாவின் திருமரபை அடிப்படையாகக் கொண்டுள்ளனர். 1653 வரை ஒரே திருச்சபையாக இருந்த மார் தோமா கிறிஸ்தவர்கள் இன்று பல சபைகளாக பிரிந்து வாழ்கின்றனர். 1653-ல் நடைபெற்ற சாய்ந்த சிலுவை சபதத்திற்கு (கூனன் குரிசு சத்தியம்) பின் பழைய அணி, புதிய அணி



எனப் பிரிந்த மக்கள், இன்று மலங்கரை என்றும் மலபார் என்றும் அடையாளப்படுத்தப்படுகின்றனர். 1653-ல் உருவான பிரிவிற்கு பின் புதிய அணியை சார்ந்த மக்கள் ஒன்றிப்பு நிலையை பேரார்வத்துடன் கனவு கண்டிருந்தனர்.

மலங்கரை ஆர்த்தடோக்ஸ் சபையில் பெதனி ஆயராக இருந்த மார் இவானியோஸ் ஆண்டகையின் தலைமையில் இக்கனவு நனவாக்கப்பட்டது. 1930, செப்டம்பர் 20-ம் நாள் நடந்த ஒன்றிப்பு நிகழ்விற்கு 2030-ம் ஆண்டு நூறு வயது நிறைவுறுகிறது. நூற்றாண்டு விழா காண தனிநபர், குடும்பம், பங்கு, திருச்சபை ஆகிய தளங்களில் தயாரிப்புக்கள் தேவைப்படுகின்றன. இத்தயாரிப்புக் காலத்தில் மறுமலர்ச்சித் தரும் பணிகளையும், ஒழுங்குமுறைகளையும், நடைமுறைப்படுத்த வேண்டுமென்று 2024 பெப்ரவரி மாதத்தில் நடைபெற்ற தூய ஆயர் மாமன்றம் முடிவெடுத்தது.

**மார் இவானியோஸ் ஆண்டகை வணக்கத்திற்குரியவர்**

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபை மிகுந்த மகிழ்வுடனும், இறைவனுக்கு நன்றி சொல்கிறது. கடவுளின் கரைகாண முடியாத கருணையாலும், அன்பாலும், நம் திருச்சபையின் தந்தை இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகையை திருத்தந்தை பிரான்சிஸ் 2024, மார்ச் 14-ம் நாள், அனைத்துலகத் திருச்சபையில் வணக்கத்திற்குரியவர் என்ற நிலைக்கு உயர்த்தினர்.

மலங்கரை சபைக்கு பொதுவாகவும், மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபைக்கு தனிப்பட்ட முறையிலும், இது பெருமையையும், மகிழ்வையும் தருகின்ற ஒன்று. கத்தோலிக்கத் திருச்சபையில், வணங்கத்தக்கவர் என்ற நிலையை அடைகின்ற முதல் நபர், மார் இவானியோஸ் ஆண்டகையே. கடவுள், கனிவுடன் வழங்கிய இவ்வாசீருக்கு நன்றி கூறுவோம். அவரை மாட்சிப்படுத்துவோம். இந்த ஒரு அறிவிப்புக்காக, நாம் மிகவும் ஆவலோடு காத்திருந்தோம்.

திருத்தந்தையின் திருப்பீடம், மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின் பரிந்துரைகளையும், தேவைகளையும், கனிவுடன் காணும் அணுகுமுறையை எப்போதும் கையாண்டு வருகிறது.

வணக்கத்திற்குரிய பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் புனிதர் பட்ட நடைமுறைகள் 1998-ல் தொடங்கப்பட்டது. நினைவில் வாழும், சிறில் மார் பெசேலியோஸ் காதோலிக்க பாவா, அதற்கு தலைமை வகித்தார். புனித நிலையில் வாழ விரும்பிய பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையை, இறையூழியராக அறிவிக்கும் பேற்றை கடவுள் பலவீனனாகிய எனக்கு வழங்கினார். திருவனந்தபுரம் பேருயர் மறைமாவட்ட அளவில் நடத்தப்பட்ட ஆய்வுகள் மற்றும் விசாரணைகளின் தொகுப்பு ஒரு இலட்சம் பக்கங்களுக்கு மேல் இருந்தன. இவற்றின் சுருக்கம் தயார் செய்யப்பட்டு உரோமைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. புனிதர் பட்ட நடவடிக்கைகளுக்கான உரோமை ஆணையும், அவற்றை ஆய்வு செய்ததன் விளைவாக, பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகை, வணக்கத்திற்குரியவர் என அழைக்கப்பட தகுதியுடையவர் என்று ஒருமித்தக் கருத்தை தெரிவித்தது. இப்பரிந்துரையை திருத்தந்தை பிரான்சிஸ் ஏற்றுக்கொண்டு 2024 மார்ச் 14-ம் நாள், மார் இவானியோஸ் ஆண்டகை வணக்கத்திற்குரியவர் என்று திருத்தந்தை அறிவித்தார்.

இப்பெரிய ஆசீருக்கு நன்றி கூறும் வண்ணம், 2024 மார்ச் 14-ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு, பட்டம் தூய மரியன்னைப் பேராலயத்தில் ஆயர்களும், குருக்களும், இருபால் துறவிகளும், இறைமக்களும் இணைந்து நன்றி திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டு, கல்லறையில் தூப மன்றாட்டும் நடத்தப்பட்டது. பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் வாழ்வு, பின்பற்றத்தக்க கிறிஸ்தவ வாழ்வு என்றும், அவருடைய வாழ்க்கைப்பாணி முன் மாதிரியானது என்றும் இவரது வாழ்வு புண்ணிய வாழ்வு என்று உலகிற்கு திருத்தந்தையால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதைவிட மேலான



ஆனந்தம் மறுவொன்றிப்பின் நூற்றாண்டு காண தயராகும் நமக்கு உள்ளனவோ?

ஆண்டவருக்கு நன்றி சொல்லுவோம்! அவரை மாட்சிப்படுத்துவோம்! சிறிய மந்தைக்கு கடவுளின் திட்டத்தில் பெரிய ஆசீர் கிடைத்துள்ளது என்று உறுதியாக நம்புவதற்கு இன்னும் ஒரு அடையாளம் நமக்கு கிடைத்திருக்கிறது. “கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்'' இந்த இறைவார்த்தையை நம்புவதற்கு இதுவொரு உத்வேகமே!

மார் இவானியோஸ் ஆண்டகை “வணக்கத்திற்குரியவர்” என்று அழைக்கப்பட நாம் மேற்கொண்ட முயற்சிகளில் உதவியவர்கள் ஏராளம் உள்ளனர். தூய வாழ்வு வாழ்ந்து, இறைவனடி சேர்ந்த ஆயர்களையும், பேராயர்களையும், இன்று திருச்சபையை வழி நடத்தும் ஆயர் பெருமக்களையும், புனிதர் பட்ட நடவடிக்கைகளை தொடங்கி வைத்த, என்றும் நன்றியுடன் நாம் நினைவுகூரும் பெசேலியோஸ் காதோலிக்க பாவாவையும் நன்றியுடன் நினைவு கூர்வோம். ஆயர் மாமன்றத்தின் ஆணைக்கிணங்க திருவனந்தபுரம் பேருயர் மறைமாவட்டம், பெதனி ஆசிரமம், பெதனி துறவிகளின் சமூகம், மேரி மக்கள் துறவிகளின் சமூகம் ஆகியோர் வேண்டுதல் சமர்ப்பித்தனர். பெதனி ஆசிரமத்தையும், பெதனி துறவிகளின் சமூகத்தையும் நிறுவியவர் அவரே. இந்த இரண்டு துறவற சமூகங்களும் திருச்சபையில் ஆற்றும் திருப்பணிகளை நன்றியுடன் நினைவு கூர்கிறேன். மார் இவானியோஸ் ஆண்டகையில் ஆவலுடனும், ஆசீருடனும் மேரி மக்கள் துறவிகளின் சமூகம் மலங்கரை திருச்சபையில் நிறுவப்பட்டது. மேரி மக்கள் துறவிகளின் நற்செய்தி அறிவிப்பு பணிக்கான அற்பணத்தை, இதய பூர்வம் பாராட்டுகிறேன். நமது திருச்சபையில் உடன் உழைப்பாளர்களாகவுள்ள ஆயர்கள், இறைவனடி சேர்ந்த ஆயர்கள், குருக்கள், ஆசிரம உறுப்பினர்கள், துறவிகள் எதிர்காலத் திருச்சபைக்கு தலைமைத் தரவிருக்கும் குருமாணவர்கள், குடும்ப உறுப்பினர்கள், உள்நாட்டிலும்,

வெளிநாட்டிலும் வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள், நமது திருச்சபையின் மீது அன்பும், அக்கரையும் காட்டும் சகோதரி சபைகள் கத்தோலிக்கத் திருச்சபையில் சீறோ மலபார் சபை, இலத்தீன் சபை, பொது சமூகம் போன்ற அனைவருக்கும் எனது அன்பையும், ஆதரவையும், நன்றியையும் இதய பூர்வம் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்குறிப்பிடப்பட்ட அனைவரும் நமது திருச்சபை மென்மேலும் வளர தங்களது அன்பையும் அக்கரையையும் காட்டியுள்ளார்கள். அது நமக்கு அனுபவமாகியும் உள்ளது.

தொடர்ந்து வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகை புனிதர் என அறிவிக்கப்பட வேண்டுமென்று தொடர்ந்து மன்றாடுவோம். திருச்சபையின் எல்லா உறுப்பினர்களும் இதயபூர்வம், ஆர்வமுடன் இந்த மன்றாட்டில் பங்கேற்க வேண்டும். அவரது பரிந்துரையில் புதுமைகள் நடக்க வேண்டும். அது அறிவியல் சார்ந்து, உறுதிப்படுத்தப்பட வேண்டும். நமது பங்குகள், மறைபரப்பு ஆலயங்கள், ஆசிரமங்கள், துறவற இல்லங்கள், பயிற்சியகங்களில் திருப்பலிக்கு பின் இந்த செபத்தை பக்தியுடன் சொல்ல வேண்டும். நமது குடும்பங்களில் மாலை மன்றாட்டுக்கு பின் இந்த செபத்தை ஏறெடுக்க வேண்டும்.

## நினைவுத்திருநாள் 2024

வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையில் 71-ம் நினைவுத் திருநாள் 2024 ஜூலை 1 முதல் 14 வரையுள்ள நாட்களில் அவர் இறுதி ஓய்வு கொள்ளும், பட்டம் தூய மரியன்னை பேராலயத்தில் வைத்து நடத்தப்படுகிறது. கல்லறை சிற்றாலயத்தில் 1 முதல் 14 வரையுள்ள நாட்களில் திருப்பலியும், பேருரைகளும் நடைபெறும். ஜூலை 10-ம் நாள் ராந்நி பெரு நாட்டிலிருந்து ஆரம்பிக்கும் பாதயாத்திரை 14-ம் நாள் மாலை 5 மணிக்கு கல்லறையை வந்து சேரும். அன்றைய நாள் மாலை 5 மணிக்கு, கல்லறையில் செபமும் மெழுகுவர்த்தி பவனியும் நடைபெறும். நினைவுத்திருநாள் 15-ம் நாள்,



ஆடம்பர கூட்டுத்திருப்பலி நடைபெறும். திருச்சபையின் எல்லா ஆயர்களும், குருக்களும் இணைந்து திருப்பலி ஒப்புகொடுப்பர்.

திருநாளை முன்னிட்டு 15 நாட்கள் நடைபெறும் திருச்சடங்குகளின் ஒழுங்குகளின் செலவுகளுக்கு காணிக்கைகள் வழங்க வாய்ப்புண்டு. பந்தல்,
திருநாள் அன்று வழங்கப்படும் நேர்ச்சை அப்பம், ஒலி ஒளி அமைப்பு, திருநாள் தின நிகழ்வுகளை நேரலையில் வழங்குதல் போன்றவற்றிற்கு முழுமையாகவோ, பகுதியாகவோ காணிக்கை வழங்க விரும்புவோர் திருவனந்தபுரம் பட்டம் பேராலயத்திலுள்ள புனிதர் பட்ட நடவடிக்கை அலுவலகத்தின் 9447429520 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும். இத்தேவைகளுக்காக நீங்கள் வழங்க விரும்பும் தொகையை, நாலாஞ்சிறையில் தொடங்கப்பட்டிருக்கும் South Indian வங்கி கணக்கில் வழங்கலாம். அனைவரும் இதில் ஒத்துழைக்க வேண்டுமென்று உங்களை அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

## மார் இராபேல் தட்டில் உயர் பேராயருக்கு வரவேற்பு

நாம் கொண்டாடும் இந்த நினைவுத்திருநாளில் சீறோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர், மேன்மைமிகு மார் இராபேல் தட்டில் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்கள். உயர் பேராயராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின் முதன் முறையாக நம் மத்தியில் வரும் போது மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபை அவருக்கு சிறந்த வரவேற்பு வழங்க விரும்புகிறது. உங்கள் அனைவரையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் வாழ்வு அனைவருக்கும் குறிப்பாக திருச்சபை மக்களுக்கும், ஆன்மீக உத்வேகம் வழங்கட்டும். இறைபராமரிப்பில் அடைக்கலம் தேடும் நாம் இணைந்து இறைவேண்டல் செய்வோம். வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகை நமக்காக மன்றாடட்டும்.

கடவுளின் கருணையும் ஆசீரும் உங்கள் அனைவர் மேலும் இறங்கி தங்குவதாக. இது இறையன்னையாகிய கன்னிமரியாளுடையவும், திருத்தூதர் குழுமத்தினுடையவும், சிறப்பாக நமது தந்தையாகிய மார் தோமாவின் மன்றாட்டாலும் அமைவதாக. ஆமேன்!

*இவண்,*
ஆண்டவரில் உங்கள் எளிய பணியாள்,

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
மலங்கரை சுறியானி கத்தோலிக்கத்
திருஅவையின் உயர் பேராயர் - காதோலிக்கோஸ்

20-06-2024

## திருப்பயண ஒழுங்குமுறைகள்

**2024 ஜூலை 10 புதன் - முதல் நாள்**

| | |
|---|---|
| காலை 6.30 மணி | : **ராந்தி - பெருநாடு, குரிசுமலை** |
| | : **காலை மன்றாட்டு, திருப்பலி** |
| தலைமை | : **மோறான் மோர் பெசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ் காதோலிக்க பாவா** |

**ஜூலை 14 ஞாயிறு - ஐந்தாம் நாள்**

| | |
|---|---|
| மாலை 5.15 மணி | : **கல்லறை சிற்றாலயத்தில் திருப்பயணிகளுக்கு வரவேற்பு** |
| மாலை 6.30 மணி | : **மாலை மன்றாட்டு - பேராலயம் மெழுகுவர்த்தி பவனி, கல்லறையில் தூப மன்றாட்டு திருத்தூதுவ ஆசீர்** |

**ஜூலை 15 திங்கள் - 71-ம் நினைவு திருநாள்**

| | |
|---|---|
| காலை 8.00 மணி | : **வரவேற்பு, காலை மன்றாட்டு ஆடம்பர கூட்டுத்திருப்பலி** |
| தலைமை | : **மோறான் மோர் பெசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ் காதோலிக்க பாவா** |
| ஆருளுரை | : **மேன்மைமிகு உயர் பேராயர் மார் இராபேல் தட்டில்** (சீறோ மலபார் சபை உயர் பேராயர்) **கல்லறையில் தூப மன்றாட்டு அன்பின் விருந்து** |



**Most Rev.Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist 629 165

Cir. No. 5/2024

21.06.2024

## CIRCULAR

***கிறிஸ்துவில் அன்புநிறை அருட்தந்தையர்களே/ இருபால் துறவிகளே/ இறைமக்களே,***

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபையினுடையவும் குறிப்பாக மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் திருப்பணிகளுக்காக இறைவேண்டல் செய்து உளமார உதவும் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். எல்லா வருடமும் ஜூன் மாதம் இறுதியில் குருமட தினம் கொண்டாடுவதை நாம் அறிந்ததே. இவ்வருடமும் ஜூன் மாதம் 23-ம் நாள் குருமட தினமாக கொண்டாடவுள்ளோம். குருத்துவ பயிற்சி பெறும் குருமாணவர்களுக்காக இறைவேண்டல் செய்தும் அவர்களின் பயிற்சிக்கு உதவி புரிவதும் நம்முடைய கடமை, எனவே இந்நாளில் சேகரிக்கப்படும் சிறப்பு கவர் காணிக்கையில் அனைவரும் பங்கெடுக்க அன்போடு வேண்டுகிறேன்.

அத்தோடு கிடைக்க பெறும் கவர் காணிக்கைகளை மறைமாவட்ட நிதி அலுவலகத்தில் ஜூலை 15-ம் தேதிக்கு முன் ஒப்படைக்கவும் கேட்டுக்கொள்கிறேன். பங்குகளிலிருந்து கிடைக்கும் தொகையின் பாதியை நம் மறைமாவட்ட இளநிலை குருத்துவ பயிற்சியகத்தின் செயல்பாடுக்காகவும் மீதியை மலங்கரை கத்தோலிக்க உயர் குருமட பயிற்சியகத்தின் செயல்பாடுகளுக் காகவும் பயன்படுத்தப்படும். குருத்துவ வாழ்வில் நுழையும் மாணவர்களுக்காக இறைவேண்டல் செய்து உதவி புரிவோம்.

ஜூன் 29-ம் நாள் நம் மறைமாவட்ட விண்ணக பாதுகாவலர் புனித பவுலடியாரின் திருநாளை மறைமாவட்ட தினமாக கொண்டாடுகிறோம். எனவே இந்நாளின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதோடு அனைவரும் இணைந்து மறைமாவட்ட மற்றும் பொது நன்மைக்காக நன்றி கூறி இறைவேண்டல் செய்வோம்.

நம் ஆண்டவர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

*அன்புடன்,*

**✝ மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்

# பாசமிகு ஆயரின் பெயர் கொண்ட விழா மற்றும் மறைமாவட்ட தின கொண்டாட்டம்

ஜூன் மாதம் 29-ஆம் தேதி அகில உலக கத்தோலிக்க திருச்சபை, திருச்சபையின் இரு தூண்களாக விளங்கும் புனித பேதுரு மற்றும் புனித பவுல் ஆகியோரின் திருவிழாவை சிறப்பாக கொண்டாடியது. நம்முடைய பாசமிகு ஆயர் பெருந்தகை அவர்கள் புனித பவுலடியாரை தன் விண்ணக பாதுகாவலராக ஏற்றிருப்பதால் தன் பெயர் கொண்ட விழாவை அன்றைய தினம் கொண்டாடினார்கள். அத்தோடு, நம்முடைய மறைமாவட்டமும் புனித பவுலடியாரையே விண்ணக பாதுகாவலராக கொண்டிருப்பதால் மறைமாவட்டமும் அன்றைய தினத்தை மறைமாவட்ட தினமாக கொண்டாடியது. அன்றைய தினம் திருப்பலியை ஆயர் அவர்கள், மார்த்தாண்டம் பேராலயத்தில் வைத்து, மறை மாவட்ட குருக்களோடு இணைந்து நன்றி திருப்பலியாக ஒப்புக் கொடுத்தார்கள். இவ்விழாவினை சிறப்பூட்டும் வண்ணமாக குழித்துறை மறை மாவட்டத்தின் புதிய ஆயர் பாசமிகு ஆல்பர்ட் அனஸ்தாஸ் ஆண்டகை அவர்கள் திருப்பலியில் பங்கு கொண்டு மறையுறை வழங்கி சிறப்பித்தார்கள். புதிய ஆயர் அவர்கள் முதல் முதலாக நம் மறை மாவட்டத்திற்கு வருகை தந்தமையால் ஆயர் அவர்களை சிறப்பாக வரவேற்று வாழ்த்தும் கூறி கௌரவித்தார்கள்.

## புனித ஜான் மரிய வியானி குருக்கள் இல்லம் அர்ச்சிப்பு

ஜூன் மாதம் 28-ஆம் தேதி கழுவன்திட்டையில் புதிதாக கட்டப்பட்டுள்ள குருக்கள் இல்லமானது, நம்முடைய மறை மாவட்ட ஆயர், குருக்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் ஆகியோர் முன்னிலையில, மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் தந்தையும் தலைவருமாகிய மோறான்மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ் காதோலிகோஸ் ஆண்டகை அவர்களால் திறக்கப்பட்டு அர்ச்சிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாறசாலை மறை மாவட்டத்தின் ஆயர் தோமஸ் மார் எவுசேபியோஸ் ஆண்டகை அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். இந்நிகழ்வில் மறை மாவட்ட குருக்கள், அருட்கன்னியர்கள், மேய்ப்பு பணி குழுவின் உறுப்பினர்கள் மற்றும் மறைமாவட்டத்தின் அனைத்து பங்குகளில் இருந்தும் செயலர்கள் மற்றும் பொருளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



# குருமடச் செய்திகள்

- இளங்குருமடத்தின் புதிய துணை அதிபர் தந்தையாக அருட்தந்தை அஜேஷ் அவர்கள் 02.06.2024 அன்று பனச்சமூடு மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை கோர் எப்பிஸ்கோப்பா எஸ் வற்கிஸ், பேரருட்தந்தை பீட்டர் ஆனந்த், குருமட அதிபர் தந்தை சஜித், அருட்தந்தை அபிஷேக் ராஜ் மற்றும் அருட்சகோதரர்கள் முன்னிலையில் பொறுப்பேற்றார்.
- 05.06.2024 அன்று கோடைகால விடுமுறை முடிந்து அருட்சகோதரர்கள் மிக மகிழ்ச்சியோடு குருமடத்தில் வந்து மீண்டும் பயிற்சியில் தங்களை இணைத்துக் கொண்டார்கள்.
- 09.06.2024 அன்று ஏழு அருட் சகோதரர்கள் புதிதாக குரு மடத்தில் இணைந்துள்ளார்கள். அவர்கள் விவரம் பின்வருமாறு;



- ❖ இளம்குருமடத்தின் பாதுகாவலரான புனித எப்ரேம் அவர்களின் பெயர் கொண்ட தின விழா 18.06.2024 அன்று கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் திருப்பலி தலைமையேற்று அற்பித்தார்கள். இறை அழைத்தலை பற்றியும் புனித எப்ரேம் அவர்களின் வாழ்க்கையை பற்றியும் மறையுரை வழங்கினார். அருட்தந்தை ஜோனி ஆல்பிரட், அதிபர் தந்தை, துணை அதிபர் தந்தை, அருட்சகோதரிகள், மற்றும் அருட்சகோதரர்கள் திருப்பலியில் பங்கேற்றனர். பின்னர் உணவின் வேளையில் அருட் சகோதரர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றது. இதில் அருட்தந்தை கெபின் அவர்கள் அருட்சகோதரர்களுக்கு வாழ்த்துகள் தெரிவித்தார். பின்னர் அதிபர் தந்தையின் பாராட்டுதலுடன் பெயர் கொண்ட தின விழா இனிதே நிறைவுற்றது
- ❖ 19.06.2024 அன்று காலை 11:00 மணிக்கு மார்த்தாண்டம் மறை மாவட்ட குருகுல முதல்வர் பேரருட் தந்தை ஜோஸ் பிரைட் அடிகளார் அவர்கள் திருப்பலி தலைமை ஏற்று நடத்தி அருட்சகோதரர்களுக்கு மறையுரை வழங்கினார். பின்னர் இந்த ஆண்டுற்கான புதிய கல்வி ஆண்டினை அதிகாரப்பூர்வமாக துவங்கி வைத்தார்.
- ❖ இளம்குருமடத்தில் குருமட தினத்தை முன்னிட்டு 23.06.2024 அன்றைய நாளனது ஆன்மீகமான முறையில் சிறப்பிக்கப்பட்டது. அன்று காலையில் நற்கருணை ஆராதனை நடைபெற்றது, இதில் அருட் சகோதரர்கள் இந்நாள் மற்றும் முன்னாள் ஆயர்கள், அதிபர் தந்தையர்கள், துணை அதிபர் தந்தையர்கள், ஆன்மீக தந்தையர்கள், குருக்கள் இதுவரையிலும் உதவி செய்த எல்லா உபகாரிகள், அவர்கள் பெற்றோர்கள், இறை அழைத்தலை ஊக்குவிக்கின்ற ஒவ்வொரு மக்களுக்காகவும் நற்கருணை ஆராதனையின் வேளையில் ஜெபித்தார்கள் அதனை தொடர்ந்து அதிபர் தந்தை சஜித் அவர்களின் தலைமையில் இறையழைத்தலை மைய கருத்தாக கொண்டு திருப்பலி அர்ப்பணிக்கப்பட்டு குருமடமும் அர்ச்சிக்கப்பட்டது.



# குருக்களின் தியானம்

இம்மாத குருக்களுக்கான தியானம் 11.06.2024 அன்று காலை 9 மணிக்கு மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இம்மாத தியானத்தை பேரருட்தந்தை சகாய ஆனந்த் அவர்கள் வழி நடத்தினார்கள். இம்மாதாந்திர தியானத்தில் மறைமாவட்டத்திலுள்ள அருட்தந்தையர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

# மறைபரப்பு தளச்செய்திகள்

## தேவதானப்பட்டி மறைபரப்பு தளம்

- ✶ தேவதானப்பட்டி மறைபரப்பு தளத்தில் மிட்ஸ் சமூக சேவை மையம் சார்பாக படிக்கின்ற 25 ஏழை எளிய மாணவ மாணவிகளுக்கு படிப்பதற்கு தேவையான பொருட்கள் 17.06.2024 திங்கள்கிழமை அன்று வழங்கப்பட்டது.
- ✶ தேவதானப்பட்டி மறைபரப்பு தளத்தின் ஆரம்பம் முதலே பங்குதந்தையாக இருந்து மறைபரப்பு தளத்தை உருவாக்கி பணியாற்றிய அருட்தந்தை சஜித் பிரான்சிஸ் அவர்கள் பணி நிறைவு செய்து செல்வதால் அவருக்கு பதிலாக அருட்தந்தை ஷாஜி கிறிஸ்றோ அவர்கள் மறைபரப்பு தளத்தின் பங்குத்தந்தையாக16.06.24 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

## மதுரை மற்றும் திருச்சி மறைபரப்பு தளங்கள்

- ✶ மதுரை மறைபரப்பு தளத்தில் மிட்ஸ் சமூக சேவை மையம் சார்பாக படிக்கின்ற 20 ஏழை எளிய மாணவ மாணவிகளுக்கு படிப்பதற்கு தேவையான உபகரணங்கள் 17.06.2024 அன்று வழங்கப்பட்டது.
- ✶ மதுரை மற்றும் திருச்சி மறைபரப்பு தளங்களில் அருட்தந்தை ஜோஸ் பாறவிளை அவர்கள் பணியாற்றி வந்தார்கள். அவர் தன்னுடைய பணி நிறைவு செய்து செல்வதால் அவருக்கு பதிலாக அருட்தந்தை வில்பிரைட் அவர்கள் மறைபரப்பு தளத்தின் பங்குத் தந்தையாக 24.06.24 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

**நல்லநாதபுரம், களக்காடு மறைபரப்பு தளம்**

- ✶ நல்லநாதபுரம் மறைபரப்பு தளத்தில் மிட்ஸ் சமூக சேவை மையம் சார்பாக படிக்கின்ற 20 ஏழை எளிய மாணவ மாணவிகளுக்கு படிப்பதற்கு தேவையான உபகரணங்கள் 09.06.2024 அன்று வழங்கப்பட்டது

**நைஸ் நகர், மறைபரப்பு தளம்**

- ✶ நைஸ் நகர் மறைபரப்பு தளத்தில் மிடஸ் சமூக சேவை மையம் சார்பாக படிக்கின்ற 13 ஏழை எளிய மாணவ மாணவிகளுக்கு படிப்பதற்கு தேவையான உபகரணங்கள் 09.06.2024 அன்று வழங்கப்பட்டது.
- ✶ மறைபரப்பு தளத்தில் திருவிழாவானது இம்மாதம் 13-ஆம் தேதி முதல் 15-ஆம் தேதி வரை மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அருட்தந்தை சிபி மற்றும் திரு. ராஜன் அவருடைய தலைமையில் சிறப்பு கன்வென்ஷனும் நடைபெற்றது.

## தீன சேவன துறவற சபை (DSS)

தீனசேவன துறவற சபையின் நிறுவனரான மதர் பேத்ராவின் பிறப்பு நூற்றாண்டு விழா பட்டுவம் என்னும் துறவற இல்லத்தில் வைத்து மே மாதம் 22-ஆம் தேதி நடைபெற்றது. அதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக ஒவ்வொரு துறவற இல் லங்களிலும் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்கள். நமது மறைமாவட்டத்தில் சேவை புரியும் அருட்சகோதரிகளின் துறவற சமூகத்திலும் இந்நன்றித் திருப்பலி ஜூன் மாதம் 10-ம்தேதி அருட்தந்தை கெபின் அவர்களின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. இக்கூட்டுத் திருப்பலியிலே தக்கலை மறைமாவட்டம், காரோடு பங்கின் பங்குதந்தை அவர்களும் பங்கெடுத் தார்கள். இந்நன்றி திருப்பலியை வள்ளவிளை துறவற சமூகம், காரோடு துறவற சமூகம், குழித்துறை துறவற சமூகம் இணைந்து ஒப்புக்கொடுத்தார்கள்.



## Transfers and Appointments of Priests 2024 Marthandam Diocese

| No. | Name | Parish Priest |
|---|---|---|
| 1. | **Rev. Fr. Mariadhasan** | Fathimanagar, Kidarakuzhy |
| 2. | **Rev. Fr. Robinson** | Kanchiyode, Keezhmancode |
| 3. | **Rev. Fr. Arul Dhas** | Sooriacode |
| 4. | **Rev. Dr. Yesudhas** | Kulasekharam |
| 5. | **Rev. Fr. Jose Paravilai** | Nadaikavu, Chekittuvilai |
| 6. | **Rev. Fr. Sajith Francis** | George Nager |
| 7. | **Rev. Fr. Wilbright** | Madurai |
| 8. | **Rev. Fr. Bibin** | Cherupalloor |
| 9. | **Rev. Fr. Wilfin Viju** | Kattuvilai, Alwarcoil |
| 10. | **Rev. Fr. Shaji Christo** | Devathanapatti |
| 11. | **Rev. Fr. Ajeesh Johan** | Christuvilagam, Aralkumarapuram |
| 12. | Rev. Fr. **Ratheesh Richard** | Ganadhasapuram, Chankaralinkaparai |
| 13. | Rev. Fr. **Jose Kirathoor** | Anbunagar |
| 14. | Rev. Fr. **Sunish Kumar** | Peruvilai Shrine |
| 15. | Rev. Fr. **Vibin Raj** | Hosur |
| 16. | Rev. Fr. **Stephen** | Chennai |
| 17. | Rev. Fr. **Siljin** | Co-Pastor, Kirathoor |
| 18. | Rev. Fr. **Anish** | Co-Pastor, Fathimanagar |
| 19. | Rev. Fr. **Abishake Raj** | Ass. Parish Priest, Panachamoodu |

| | | |
|---|---|---|
| 20. | **Rev. Fr. George Solomon OIC** | Mankadu |
| 21. | **Rev. Fr. Sijo Thomas OIC** | Karimanoor, Vellachipara |
| 22. | **Rev. Fr. Anoop V. Aniyan** OIC | Vazhodu, Chenamvilai |

## New Offices of Priests 2024
## Marthandam Diocese

| No. | Name | Office |
|---|---|---|
| 1. | Rev. Fr. Sajith Francis | Minor Seminaray, Rector |
| 2. | Rev. Fr. Robinson | Director - Arulvazhviyam |
| 3. | Rev. Fr. Ajeesh Johan | Secretary - Liturgical Commission |
| 4. | Rev. Fr. Wilfin Viju | Director - Santhom Press |
| 5. | Rev. Fr. Jose Paravilai | School of Commerce |
| 6. | Rev. Fr. Jose Kirathoor | Secretary - Communication Media House Minister |
| 7. | Rev. Fr. Anto Jebin | Secretary - Bible Commission |
| 8. | Rev. Fr. Bibin | Spiritual Director - Vincent De Paul |
| 9. | Rev. Fr. Justin Nellikavilai | Director - MCYM |
| 10. | Rev. Fr. Vibins Wilson | Secretary to the Bishop |
| 11. | Rev. Fr. Ajesh | Vice Rector - Minor Seminary |
| 12. | Rev. Fr. Anish Marthandam | Director - MCCL |
| 13. | Rev. Fr. Abishake Raj | In Charge - Diocesan Bulletin |



## Change of Addresses

**Rev. Fr. Shaji Christo**
St. Mary's Malankara Catholic Church Marian Nagar, Therku Theru, Devadanapatty – 625 602. Theni District.

**Rev. Fr. Sajith Francis**
The Rector
St. Ephraem Minor Seminary, Elavuvilai & P.O,
K.K. District – 629 171

**Rev. Fr. Ajesh**
Vice Rector,
St. Ephraem Minor Seminary
Elavuvilai, Elavuvilai P.O,
K.K. District – 629171.

**Rev. Fr. Wilbright**
Arokiya Annai MSC Church, Thottatheru, Vedarpuliyankulam, Thanakankulam P.O.,
Madurai - 06

**Rev. Fr. Aruldas**
Malankara Catholic Church
Sooriacode, Sooriacode P.O.
K.K. Dist - 629 190.

**Rev. Fr. Robinson**
Malankara Catholic Church
Kanchiyode, Mancode P.O.
K.K. District – 629 152

**Rev. Fr. Anish**
Malankara Catholic Church
Fathimanagar,
Fathimanagar P.O.,
K.K. District - 629 165.

**Rev. Fr. Siljin**
Malankara Catholic Church,
Kirathoor, Kirathoor P.O
K.K. District - 629 181

**Rev. Fr. Mariadasan**
Malankara Catholic Church
Fathimanagar,
Fathimanagar P.O.,
K.K. District - 629 165

**Rev. Fr. Anto Jebin**
Sacred Heart of Jesus and Mary Malankara Catholic Church
Cheruppaloor P.O.
Kulasekaram.
K.K. District – 629 161

**Rev. Fr. Ratheesh Richard**
St.Thomas MSC Church
Aatuparai, Boothapandi,
Boothapandi P.O.
K.K. Dist – 629 852

**Rev. Fr. Abishake Raj**
Malankara Catholic Church
Panachamoodu, Mancode P.O.
K.K. District - 629 152

**Rev. Fr. Wilfin Viju**
Malankara Catholic Church
Chellamkonam, Kappiara P.O.
K.K. Dist – 629 156.

**Rev. Fr. Dr. Yesudhas**
Pinanthodu, Kulasekharam, SH-45, Marthandam Pechiparai Road,
K.K. District – 629 101

**Rev. Fr. Ajeesh Johan**
Malankara Catholic Church
Christuvilakam, Krishnancoil P.O.
Nagercoil, K.K. Dist – 629 001

**Rev. Fr. Jose Paravilai**
Malankara Catholic Church,
Nadaikkavu, Chathencode P.O.,
K.K. District - 629 153.

**Rev. Fr. Vibin Raj**
AVM Nager, Near St. Josph's
Schol, Kelamangalam Road,
Denkanikottai Post, Hosur,
Krishnagiri District - 635 107

**Rev. Fr. Anoop V. Aniyan** OIC
St. Antony's Home,
Bethany Nagar,
Gurunathanvilai, Venkode P.O.
K.K. District 629 171

**Rev. Fr. Thomas Reji OIC**
St. Antony's Home,
Bethany Nagar,
Gurunathanvilai, Venkode P.O.
K.K. Dist - 629 171

**Rev. Fr. George Solomon OIC**
St. Antony's Home,
Bethany Nagar,
Gurunathanvilai, Vencode P.O.
K.K. District – 629 171

**Rev. Fr. Sijo Thomas OIC**
St. Antony's HomeBethany
Nagar, Gurunathanvilai,
Venkode P.O.
K.K. District 629 171

**Rev. Fr. John S.**
USA

**Rev. Fr. Johny Alfred**
USA

**Rev. Fr. Joseph Sundaram**
USA



# நற்செய்தி சங்கம்

**கொல்லங்கோடு மறைவட்ட நற்செய்தி சங்கம்**

கொல்லங்கோடு மறைவட்ட நற்செய்தி சங்க உறுப்பினர்களுக்கான சிறப்பு வகுப்பானது 17.06.2024 அன்று ஊரம்புவிளை ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இச்சிறப்பு வகுப்பானது அருட்தந்தை ஜெபின் ஜாண் அவர்களால் ஜெபத்துடன் தொடங்கப்பட்டது. தொடர்ந்து அருட்சகோதரி மேரி பிரசாத் அவர்கள் திருவிவிலியத்தை பற்றியும் மலங்கரை ஆலயத்தின் அமைப்பு பற்றியும் வகுப்பு எடுத்தார்கள். அதைதொடர்ந்து Lectio Divina நடத்தப்பட்டது. இறுதியில் ஆராதனை மற்றும் பாவ சங்கீர்த்தனம் நடத்தப்பட்டு நற்கருணை ஆசீர்வாதத்துடன் நிறைவடைந்தது.

## புனித வின்சென்ட் தே பவுல் சபை
### மார்த்தாண்டம் மத்திய சபை

வின்சென்ட் தே பவுல் இயக்கத்தின் மார்த்தாண்டம் மத்தியச் சபையின் ஆன்மீக ஆலோசகராக அருட்தந்தை பிபின் அவர்கள் 09.06.2024 அன்று பொறுப்பேற்று கொண்டார். அருட்தந்தை அவர்களுக்கு மறைமாவட்டம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றோம்.

## MCA
### Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA சார்பில் 09.06.2024 அன்று அழகிய மண்டபம் மறைவட்டத்தை சார்ந்த அனைத்து MCA அலகுகளையும் மறைமாவட்ட MCA பொறுப்பாளர்கள் சந்தித்து, MCA செயல்பாடுகளை பற்றி விளக்கிக் கூறி பங்கு தளங்களில் MCA சிறப்பான முறையில் செயல்பட ஆவணச் செய்யப்பட்டது. அத்தோடு அழகியமண்டபம் மறைவட்டத்தை சார்ந்த அனைத்து ஆலயங்களிலும் மறைமாவட்ட MCA பொறுப்பாளர்கள் சந்திப்பதின் ஒரு பகுதியாக திரு. பிரைட், திரு. வர்கீஸ் மற்றும் திரு. லெனின் சேவியர் ஆகியோர் இணைந்து ஆழ்வார்கோவில் ஆலயம் சந்தித்து பங்குதந்தை தலைமையில் MCA கூட்டம் நடத்தினார்கள்.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## உலகசுற்றுசூழல் தினம்

உலக சுற்றுசூழல் தினமான ஜ-ன் 5-ம் தேதியை சிறப்பிக்கும் விதமாக நடைக்காவு ஆலயத்தில் வைத்துமிட்ஸ் நிறுவனம் சார்பில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அவர்கள் தலைமையில் சிறப்பு நிகழ்வு நடைபெற்றது. இந்தநிகழ்வில் திரு. இராஜகுமார் அவர்களால் இயற்கைவிவசாயம் மற்றும் மாடித்தோட்டம் குறித்தும் இயற்கையை பாதுகாப்பது குறித்தும் கருத்தரங்கு நடத்தப்பட்டது. தொடர்ந்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அவர்கள் சுற்றுச்சூழல் தினத்தின் முக்கியத்துவத்தை குறித்து விளக்கினார்கள். இந்நிகழ்வில் தளிர்கள் உலகம் திட்டபயனாளிகள் மற்றும் விண்ணைத் தொடு திட்ட பயனாளிகள் எனமொத்தம் 209 பயனாளிகள் கலந்துகொண்டனர். கலந்துகொண்ட அனைத்து பயனாளிகளுக்கும் பலாமரக்கன்றுகள் இலவசமாகமிட்ஸ் நிறுவனம் சார்பில் வழங்கப்பட்டது.

## உதவித்திட்டங்கள்

1. 03.06.2024 அன்று 92 சுயஉதவி குழு உறுப்பினர்களின் குழந்தைகள் மற்றும் 117 விண்ணைத்தொடு திட்டத்தின் பயனாளிகள் ஆகியோருக்கு படிப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

2. 11.06.2024 அன்று மிட்ஸ் ஜீவன் திட்டத்தின் வழியாக மிட்ஸ் சுய உதவி குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் குடும்பங்களில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஏழு நபர்களின் மருத்துவ செலவிற்காக ருபாய் 40,000/- வழங்கப்பட்டது.

## பிறநிகழ்வுகள்

1. 23.05.2023 அன்று ஆசாரிபள்ளத்தில் வைத்து Ram Foundation மற்றும் மிட்ஸ் நிறுவனம் இணைந்து நடத்திய இலவச புற்றுநோய் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் அந்த பகுதியை சேர்ந்த 23 பயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

2. 23.05.2024 அன்று விண்ணைத் தொடுதிட்டத்தின் பயனாளிகளுக்கு நடைக்காவு ஆலயத்தில் வைத்து Group Counseling நடத்தப்பட்டது. இந்தநிகழ்வினை Dr. அரசு, திருமதி. மேரி பெல்சிட் மற்றும் அருட்சகோதரர் சச்சின் ஆகியோர் நடத்தினர். இந்தநிகழ்வில் 56 பயனாளிகள் கலந்துகொண்டனர்.

3. 30.05.2024 அன்று ஜெர்மெனியில் இருந்து திருமதி. சூசன்னா மற்றும் அவரோடு இணைந்து தளிர்கள் உலகம் திட்டத்தில் உதவி செய்யும் உதவியாளர்களும் மிட்ஸ் நிறுவனத்திற்கு வருகை தந்து பயனாளிகளின் இல்லங்களை சந்தித்தனர்.

4. 08.06.2024 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் மாதாந்திர சிறப்பு வகுப்புகள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டன. இந்தவகுப்புகளில் கலந்துகொண்ட தாய்மார்களுக்கு Dr. அரசு அவர்களால் ஹார்மோன் சமநிலைமையின்மை மற்றும் மனஅழுத்த மேலாண்மை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சி வகுப்பில் 118 மாணவர்களும் 56 தாய்மார்களும் கலந்துகொண்டனர்.

5. 11.06.2024 அன்றுமிட்ஸ் அலுவலக பணியாளர்களுக்கு Towards a sustainable world என்றதலைப்பில் நாமக்கல்லை சேர்ந்த அருட்தந்தை பரத் ஜெயராஜ் அவர்களால் பயிற்சி வழங்கப்பட்டது. இந்த பயிற்சியில் மிட்ஸ் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

# MCYM
## Youth Apostolate

மார்த்தாண்டம் மறைமாவட்ட இளையோர் இயக்கத்தின் அரையாண்டு ஆட்சி மன்ற கூடுகையானது மறைமாவட்ட ஆயர் அவர்களின் தலைமையில் 26.05.2024 அன்று நடைபெற்றது. இக்கூடுகையில் மறைமாவட்ட இளையோர் இயக்கத்தின் புதிய இயக்குனராக அருட்தந்தை ஜஸ்டின் நெல்லிக்காவிளை அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். அத்தோடு முன்னாள் இயக்குனர் அருட்தந்தை ஜோணி ஆல்பிரட் அவர்களுக்கு இளையோர்களால் பிரியாவிடையும் சிறிய அன்பளிப்பும் வழங்கப்பட்டது. அதைதொடர்ந்து ஆயர் லாறன்ஸ் மார் ஏப்ரேம் ஆண்டகை அவர்களின் நினைவுநாளை முன்னிட்டு நடத்தப்பட்ட குறும்பட போட்டியில் வெற்றி பெற்ற பங்கிற்கு ஆயர் அவர்கள் பரிசு வழங்கி சிறப்பித்தார்கள். இப்போட்டியில் முதல் பரிசினை பீச் ரோடு பங்கும், இரண்டாம் பரிசினை மார்த்தாண்டம் பேராலய பங்கும் பெற்றனர்.

### பேராலயக் கட்டுமானபணிக்கான நன்கொடைகள் (ஜுன் - 2024)

| S.No. | Name | Amount |
|---|---|---|
| 1. | Vellachiparai | 6650/- |
| 2. | Mantharamputhoor | 3500/- |
| 3. | Malankarabhavan | 2500/- |
| 4. | Chempakatharish | 400/- |



# HEALTH FOR ONE MILLION (HOM)
## Diocese of Marthandam

HOM அலுவலக பணியாளர்கள் மற்றும் ஆர்கனைசர்களின் மாதாந்திர ஆலோசனை கூட்டம் 06.05.2024 அன்றுர் HOM அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் நடைபெற்றது. HOM பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். திருமதி லதா அவர்கள் அறிக்கை வாசித்தார்கள். அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் ஒவ்வொருவரின் பணி அறிக்கை குறித்து ஆய்வு செய்தார்கள். பின்னர் HOM மற்றும் சிறப்புப் பள்ளி செயல் திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. நற்கருணை ஆண்டில் நோயாளிகளின் வீடுகளை சந்தித்து அவர்களுக்காக ஜெபிக்கவேண்டும் என இயக்குநரால் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் மருத்துவ முகாம்கள் நடத்துவது குறித்தும் தீர்மானிக்கப்பட்டது.

மார்த்தாண்டம் கொடுங்குளம் பகுதியைச் சார்ந்த பூமணி என்பவருக்கு Solar Light வழங்கப்பட்டது.

HOM நிறுவனம் சார்பாக ஜெர்மனி நாட்டில் செவிலியர்களாக பணிபுரிய விரும்பும் செவிலியர் படிப்பு படித்த நபர்களுக்கு Malankara School of Commerce, மரியாகிரியில் வைத்து ஜெர்மன் மொழி பயிற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தற்போது புதிதாக ஜெர்மன் மொழி பயில விரும்புகிறவர்களுக்கான வகுப்புகள் ஆரம்பிக்க இருக்கின்றது. ஆகவே தங்கள் பங்குகளில் செவிலியர் படிப்பு படித்து முடித்து இருக்கக்கூடிய மாணவமாணவிகள் உண்டு என்றால் அதை HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்களிடம் தெரியப்படுத்த கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். வகுப்புகள் ஜுலை மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகும்.

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் கீழ் இயங்கும் மார்த்தாண்டம் மெடிக்கல் மிஷன் சார்பாக பேதுருவின் கரங்கள் என்னும் மாதாந்திர மருத்துவ உதவித் திட்டம் செயல்பட்டு வருகிறது. தற்போது 40 நிரந்தர

படுக்கை நோயாளிகளுக்கு மாதம் 1,000/- ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. பெப்ருவரி மாதத்திற்குரிய உதவித்தொகை 20.06.2024 அன்று HOM அலுவலகவளாகத்தில் வைத்து அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்களால் வழங்கப்பட்டது.

ஜெர்மன் நாட்டைச் சார்ந்த Indienhilfe நிறுவனத்தின் தலைவர் திருமதி Susanne Limbach மற்றும் திருமதி Andria ஆகியோர் HOM நிறுவனத்திற்கு 06.06.2024 அன்று வருகை தந்தார்கள். அவருக்கு HOM அனைத்து பணியாளர்கள் மற்றும் இயக்குநர் சார்பாக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு ஆயர் பேரவையின் நலவாழ்வு பணிக்குழு சார்பாக 27.05.2024 அன்று கன்னியாகுமரி மாவட்ட அனைத்து மறைமாவட்டங்களை சார்ந்த செவிலியர்களின் கருத்தரங்கம் மற்றும் 25 வருடங்கள் செவிலியராக பணியாற்றிய செவிலியர்களை கவுரவிக்கும் நிகழ்வு சுங்கான்கடை புனித சவேரியார் கத்தோலிக்க செவிலியர் கல்லூரியில் வைத்து தமிழ்நாடு ஆயர் பேரவையின் நலவாழ்வு பணிக்குழு தலைவர் மேதகு ஆயர் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ்குமார் அவர்கள் கலந்துகொண்டு வரவேற்புரையாற்றினார்கள்.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**ஜூலை** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **19, 20** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

### பிரியாவிடை நிகழ்வு

நமது கல்வியியல் கல்லூரியில் 2022-2024-ம் கல்வியாண்டிற்கான இரண்டாமாண்டு ஆண்டு மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வானது 20062024 அன்று இறைவணக்கப் பாடலுடன் ஆரம்பமானது. முதலாமாண்டு மாணவர்கள், இரண்டாமாண்டு மாணவர்களுக்கு பிரியாவிடை நிகழ்வினை நடத்தினர். இந்நிகழ்வின் போது அனைவருக்கும் கல்லூரியின் சார்பாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

### குழந்தைகள் உரிமைச் சங்கம் (Child Rights Club)

நமது கல்வியியல் கல்லூரியில் 18.06.24, அன்று குழந்தைகள் உரிமைச் சங்க துவக்க விழாவானது அருட்தந்தை பென்னார்டு (தாளாளர்) அவர்கள் தலைமையில், கல்லூரியின் முதல்வர் ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்கள் முன்னிலையில், குழந்தைகள் உரிமைச் சங்கம் துவக்கி வைக்கப்பட்டது. இந்த சங்க விழாவில் திருமதி ஷகீலா பானு (மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரி, கன்னியாகுமரி மாவட்டம்)) அவர்கள் குழந்தைகள் உரிமை, பாதுகாப்பு பற்றிய கருத்துக்களை வழங்கினார். இவ்விழாவில் முதலாமாண்டு, இரண்டாமாண்டு மாணவர்கள் நிகழ்ச்சியின் இடையிடையே கலை நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். இதன் ஒருங்கிணைப்பாளர் முனைவர். ரோஸ் பெசியா அவர்கள் விழாவினை சிறப்பாக ஒருங்கிணைத்தார்.

### செய்முறைத் தேர்வு

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் 2022-2024-ம் ஆண்டிற்கான மாணவர்களுக்கான செய்முறைத் தேர்வானது 21.06.2024 முதல் 22.06.2024 ஆகிய இரண்டு தினங்கள் நடைபெற்றது. இதனை முனைவர். ஜே. ஜேசு லிவிங்ஸ்டன் (Convener,

Principal, RMP CSI PSK Rajaratnam Memorial College of Education, Sattankulam), திரு. வாசுதேவன் (Member, Asst. Professor, Varuvan Vadivelan College of Education, Sridevi Educational Complex, Dharmapuri) ஆகியோர் இந்த செய்முறைத் தேர்வினை நடத்தினர்.

## பெயர்விழா நல்வாழ்த்துக்கள்




அருட்தந்தை தோமஸ் காவுவிளை
ஜூலை 03



அருட்தந்தை அலெக்ஸ் குமார்
ஜூலை 17



அருட்தந்தை அபின்சன் அலெக்ஸ்
ஜூலை 17



அருட்தந்தை ஜிபு மேத்யூ
ஜூலை 25



# HOM - SPECIAL SCHOOL FOR THE MENTALLY RETARDED

### சந்திப்பும்... மகிழ்ச்சியும்...

Indienhilfe Saar J அமைப்பின் தலைவர் Ms. சூசான்னேன் விம்பாக், Ms. ஆண்ட்ரியா மற்றும் முன்னாள் இயக்குநர் தானாளர் அருட்தந்தை ஜீன்ஜோஸ் ஆகியோர் இணைந்து HOM சிறப்புப் பள்ளியை 06.06.2024 வியாழக்கிழமை அன்று வருகை தந்திருந்தார்கள். பள்ளி வளாகத்தில் வைத்து சிறப்புக் குழந்தைகள் நடனமாடி வரவேற்றார்கள். தொடர்ந்து சிறப்புக் குழந்தைகளை வகுப்பு வாரிமாக சிறப்புக்கல்வி அறையில் சந்தித்து அவர்களது வளர்ச்சி நிலைகளை கேட்டறிந்தார்கள். தொடர்ந்து நடைபெற்ற HOM பணியாளர்களின் கூடுகையில் ஒவ்வொரு துறை வாரியாக அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டது. இறுதியாக HOM சிறப்புப் பள்ளிக்கென தனிவளாகத்தில் புதிய கட்டிடம் கட்டியெழுப்ப உள்ள இடத்தை பார்வையிட்டார்கள். HOM இயக்குநர்/தாளாளர் அருட்தந்தை. அஜீஷ்குமார் அவர்கள் கட்டிட வரைபடங்களை காண்பித்து விளக்கி கூறினார்கள்.

### கல்வியாண்டு துவக்கம்

05.06.2024 அன்று HOM சிறப்புப்பள்ளியின் கல்வியாண்டு துவக்க நிகழ்வுகள் காலை 10.00 மணியளவில் நடைப்பெற்றது. சிறப்புக் குழந்தைகளை நெற்றி திலகமிட்டு இனிப்புகள் வழங்கி சிறப்பு ஆசிரியர்கள் வரவேற்றார்கள். அருட்தந்தை அஜீஷ்குமார் அவர்கள் இறைவேண்டல் செய்து வகுப்பறைகளை ஆசீர்வதித்து புதிய கல்வியாண்டை தொடங்கி வைத்தார்கள்.

# மறைவட்ட செய்திகள்

## நாகர்கோவில் மறைவட்டம்

கிறிஸ்துவிளாகம் பங்கின் பங்குதந்தையாக இருந்து செயல்பட்ட அருட்தந்தை. வில்பிரைட் அவர்கள் பணிநிறைவுச் செய்து மதுரை மறைபரப்புத்தளத்தின் பங்குதந்தையாக 24.06.24 அன்று பொறுப்பேற்றார்.

## குலசேகரம் மறைவட்டம்

- குலசேகரம் மறைவட்ட குருக்களின் கூடுகையானது ஜூன் மாதம் 21-ம் தேதி மாத்தார் குருக்கள் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூடுகையில் மறைவட்ட குருக்களின் செயலராக அருட்தந்தை ஆன்றோ ஜெபின் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார். அத்தோடு மறைவட்ட மறைக்கல்வி இயக்குனராக அருட்தந்தை பிபின் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- குலசேகரம் புனித சூசையப்பர் மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தின் புதிய பங்கு தந்தையாக பேரருட்தந்தை ஏசுதாஸ் அவர்கள் 23.06.24 அன்று பொறுப்பேற்றார்.
- சுருளக்கோடு அடைக்கல அன்னை திருத்தலத்தில் எல்லா புதன்கிழமைகளிலும் சிறப்பு ஜெபங்களும், திருப்பலியும், இறைவார்த்தை பகிர்வும் நடைபெற்றுவருகிறது. இவ்வாண்டு முதல் எல்லா ஆண்டும் செப்டம்பர் 1-ஆம் தேதி குலசேகர மறைவட்டத்திலுள்ள எல்லா பங்குகளிலிருந்தும் இறைமக்கள் வாகனங்களில் பவனியாக வந்து தங்கள் வேண்டுதல்களை இறையன்னை பாதம் சமர்ப்பித்து ஜெபவேண்டுதல் செய்ய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று தீர்மானம் எடுக்கப்பட்டது.
- மாத்தார், புனித சூசையப்பர் மலங்கரை கத்தோலிக்க ஆலய பங்கு மக்களின் முயற்சியால் ஆலயத்தை ஒட்டியுள்ள 71 சென்ட் நிலமானது ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.
- வேர்கிளம்பி, புனித பவுலடியார் ஆலயத்தின் திருவிழாவானது 28 முதல் 30 வரையிலான நாட்களில் சிறப்பாக கொண்டாடப் பட்டது.



## பனச்சமூடு மறைவட்டம்

- பனச்சமூடு மறைவட்ட குருக்களின் கூடுகையானது ஜூன் மாதம் 24-ம் தேதி பனச்சமூடு குருக்கள் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூடுகையில் மறைவட்ட இளையோர் இயக்கத்தின் இயக்குநராக பேரருட்தந்தை பீட்டர் பெனடிக்ட் ராஜன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அத்தோடு மறைவட்ட மறைக்கல்வி இயக்குனராக பேரருட்தந்தை றாபின்சன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# நன்றி நவில...

### ❖ விவிலிய பணிக்குழு

கடந்த இருவருடங்களாக விவிலிய பணிக்குழுவின் இயக்குனராக இருந்து திறம்பட வழிநடத்திய அருட்தந்தை. பிபின் அவர்களுக்கு மறைமாவட்டம் மற்றும் விவிலிய பணிக்குழு சார்பாக நன்றி தெரிவித்து கொள்கின்றோம். அத்தோடு விவிலிய பணிக்குழுவின் புதிய இயக்குனராக பொறுப்பேற்றிருக்கும் அருட்தந்தை. ஆன்றோ ஜெபின் அவர்களுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### ❖ தாய்மார் சங்கம்:

கடந்த இருவருடங்களாக தாய்மார் சங்கத்தின் ஆன்மீக இயக்குனராக இருந்து திறம்பட வழிநடத்திய அருட்சகோதரி ஏஞ்சல் ஜோஸ் அவர்களுக்கு மறைமாவட்டம் மற்றும் விவிலிய பணிக்குழு சார்பாக நன்றி தெரிவித்து கொள்கின்றோம். அத்தோடு தாய்மார் சங்கத்தின் புதிய இயக்குனராக பொறுப்பேற்றிருக்கும் அருட்சகோதரி ஷீபா அவர்களுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### ❖ MCCL

கடந்த இருவருடங்களாக MCCL - ன் இயக்குனராக இருந்து திறம்பட வழிநடத்திய அருட்தந்தை ஜோஸ் கிராத்தூர் அவர்களுக்கு மறைமாவட்டம் சார்பாக நன்றி தெரிவித்து கொள்கின்றோம். அத்தோடு MCCL-ன் புதிய இயக்குனராக பொறுப்பேற்றிருக்கும் அருட்தந்தை அனீஷ் அவர்களுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# ஆயரின் ஜூன் மாத நிகழ்வுகள்



- 28 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட குருக்கள் இல்ல திறப்பு விழா மற்றும் அர்ச்சிப்பில் கலந்து கொண்டு சிறப்பு விருந்தினர்களை வாழ்த்தி பேசினார்.
- 28 ➢ மறைமாவட்ட தினம் மற்றும் ஆயரின் பெயர்விழா சிறப்புக் கூடுகையில் கலந்துகொண்டு நன்றி கூறினார்.
- 29 ➢ மறைமாவட்ட தினம் மற்றும் ஆயரின் பெயர்விழா கூட்டுத்திருப்பலியில் தலைமை தாங்கினர்.
- 30 ➢ வேர்கிளம்பி ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.




## இம்மாதம் நினைவு கூர


ஜூலை 2024


1 – தலைமைக்குரு ஆரோன்
3 – துக்றோனோ (மார் தோமாவின் நினைவு நாள்)
ஜோசப் மார் தோமஸ் ஆண்டகையின் பெயர்விழா
5 – எழுபத்திரண்டு அறிவிப்பாளர்கள்
6 – புலிக்கோட்டில் ஜோசப் ரம்பானின் நினைவு
புனித மரிய கொரேத்தி
7 – பெந்தக்கோஸ்துக்குப்பின் ஏழாம் ஞாயிறு
குடும்ப தினம்
11 – புனித பெனடிக்ட்
13 – மார் சீலாஸ், ஆன்றணி மார் சில்வானூஸ்
ஆண்டகையின் பெயர்விழா
14 – பெந்தக்கோஸ்துக்குப்பின் எட்டாம் ஞாயிறு
15 – இறை ஊழியர் மார் இவானியோஸ் ஆண்டகையின்
நினைவு (1953)
மார் குரியாக்கோஸ், மார்த்தா யூலித்தியம்மாள்
ஆன்டனி மார் சில்வானூஸ் மற்றும் மேத்யூஸ்
மார் போலிகோர்பூஸ் ஆண்டகையின் ஆயர்
திருநிலைப்பாடு (2022)
16 – புனித கார்மேல் அன்னை
17 – தோமஸ் மார் கூறிலோஸ் ஆண்டகையின்
திருநிலைப்பாடு (1997)
19 – புனித மக்ரீனா
20 – இறைவாக்கினர் எலியா
21 – பெந்தக்கோஸ்துக்குப்பின் ஒன்பதாம் ஞாயிறு
22 – புனித மகதலா மரியாள்
23 – இறைவாக்கினர் எசேக்கியேல்
24 – லபனோனில் தாபகராகிய புனித சர்பேல்
28 – பெந்தக்கோஸ்துக்குப்பின் பத்தாம் ஞாயிறு
புனித அல்போன்சா
29 – பெத்தானியாவின் மார்த்தாவும் மரியாவும் லாசரும்
31 – லெயோலாவின் புனித இக்னேஷியஸ்

3


6


15


16


22


28


## பாசமிகு ஆயரின் பெயர் கொண்ட விழா கொண்டாட்டம்









## புனித ஜான் மரிய வியானி குருக்கள் இல்லம் அர்ச்சிப்பு







குருமட செய்திகள்


இளம்குருமட துணை அதிபர் பொறுப்பேற்பு


புதிதாக குரு மடத்தில் இணைந்த அருட்சகோதரர்கள்


MCYM







மறைபரப்பு தளச்செய்திகள்



MIDS



HOM


DSS Sisters





MCA


MCCL


Vincent De-Paul